2002 அக்டோபர் 30]

நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். அதேபோல், இப்போது இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இத்திருக்கோயிலுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, ஐயப்பன் மலைக்குச் செல்கின்ற அனைத்து பக்தர்களும் அந்தக் கோயிலுக்கு வந்து தரிசித்துச் செல்கிறார்கள். அது காவிரி ஆறும் பவானி ஆறும் இணைகின்ற ஒரு முக்கூடலாகும். இந்தக் கோயிலினுடைய வருமானம் வருடம் ஒன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் வரையில் இருக்கின்றது. ஆகவே, இந்தத் திருக்கோயிலில் வாகனங்கள் நிறுத்துவதற்கு மிகவும் சிரமமாகவும், வரும் பக்தர்கள் தங்குவதற்கு இடவசதி இல்லாமலும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்தக் கஷ்டத்தைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநில மற்றும் மைய சுற்றுலாத் துறை மூலம் நிதி ஒதுக்க சிபாரிசு செய்யுமாறு அன்புடன் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி உட்பட 38 இடங்கள் புனிதத் தலங்களாக அறிவிக்கப்பட்டு, அப்புனிதத் தலங்களில் அடிப்படை வசதிகள் உட்பட பல்வேறு வசதிகள் செய்யப்பட வேண்டுமென அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், பவானி கூடுதுறையில் அடிப்படை வசதிகள், கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்திட ரூ.39 இலட்சம் செலவில் உரிய பணிகளை மேற்கொள்ள ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மேற்படி பணிகளை ஈரோடு, பொதுப்பணித் துறை கட்டடக் கோட்டம், செயற் பொறியாளர் அலுவலகம் மூலம் வேலைகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 71, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

71—

ஆரம்ப சுகாதார நிலையம்

***3984—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, ஆனைகுளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், ஆனைகுளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் மருந்தும் இல்லை; மருத்துவர்களும் இல்லை என்ற நிலையிலிருந்த சூழ்நிலையில் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவற்றையெல்லாம் போக்கி, பொதுமக்களுக்குத் தாராளமாக மருந்துகளையும் மருத்துவர்களையும் வழங்கினார்கள். அப்படி வழங்கிய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆனைகுளம் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிக் கொடுத்தால், ஆனைகுளம் ஊராட்சிக்கு உட்பட்ட ஆனைகுளம், அம்மையாபுரம், அய்யாபுரம், அருணாசலபுரம் மற்றும் குணையநேரி, சுப்பையாபுரம், பூப்பாண்டியாபுரம், ரெட்டைகுளம் ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 10,000 பேர்கள் பயன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 படுக்கை வசதிகள் செய்து கொடுக்கும் இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது கட்டித் தர இயலாது என்று கூறி இருக்கிறார்கள். நாங்கள் எல்லாம், சக சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் செல்லும்போது எங்களை அன்போடு வரவழைத்து, எந்தக் காரியமாக இருந்தாலும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைக்கிணங்க செய்து கொடுக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து அங்கு ஒரு துணைச் சுகாதார மையம் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதைச் சட்டப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதிகளுக்கு

2002 அக்டோபர் 30]

கூடுதலான மருத்துவ சேவையை வழங்குகிற வகையில்தான் நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், கடையநல்லூரில் உள்ள வட்டம்சாரா மருத்துவமனைக்கு நபார்டு வங்கியினுடைய நிதி உதவியோடு ஒரு தாலுக்கா மருத்துவமனையில் என்னென்ன வசதிகள் இருக்கவேண்டுமோ அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 72, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

72—

மண்ணெண்ணெய் பங்க்

***18599—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு கூட்டுறவு உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் திருவதிகையை மையமாகக் கொண்டு ஒரு கிளை மண்ணெண்ணெய் பங்க் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி-பண்ருட்டி நகரில் திருவதிகையை மையமாகக்கொண்டு ஒரு கிளை மண்ணெண்ணெய் பங்க் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் 45,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகிறார்கள். பண்ருட்டி நகரின் மையப் பகுதியில் மட்டும்—ஒரே ஒரு இடத்தில் மட்டும்—இப்போது மண்ணெண்ணெய்